# வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
# WENTWORTHVILLE TAMIL STUDY CENTRE

Girraween Public School, 9 Bando Road Girraween NSW 2145

## ஆண்டு 3 - பேச்சுப் போட்டி

**போட்டி நடைபெறும் திகதி: 26.05.2018 (3.45 pm)**

---

**நடுவர்களுக்கும், சபையோர்களுக்கும் எனது அன்பார்ந்த வணக்கம்.**

## தாய் மொழியே வாய்மொழியாம்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றார் பாரதியார். இது தமிழ் மொழியின் இனிமையையும், சிறப்பையும் எடுத்துக்காட்டுகிறது.

ஒவ்வொருவரும் தங்கள் தாய் மொழியிலேயே உறவுகளுடன் உரையாடுகிறார்கள். நாங்களும் எமது தாய்மொழியான தமிழிலேயே உரையாட வேண்டும். எமது தாய் மொழியைக் கதைத்தால் தான் அது வாய்மொழியாக வளரும். நாங்கள் தாய் மொழியின் ஊடாகவே எமது கலை, கலாசாரம், பண்பாடுகளை வளர்த்து வருகின்றோம். எங்கள் தாய்மொழி ஒவ்வொருவரின் உணர்வோடும், உயிரோடும் கலந்து நிற்க வேண்டும்.

உலகின் தொன்மையான மொழிகளில் ஒன்றாகவும், செம்மொழியாகவும் விளங்கும் எம் தமிழ் மொழியை வளர்க்க நாம் தாய் மொழியைப் பேச வேண்டும். எழுத்திலும், பேச்சிலும் மணம் வீசச் செய்ய வேண்டும். சிறப்பு மிக்க எம் தமிழ் மொழியைக் கற்று வளர்ப்போம். அதனையே வாய் மொழியாகக் கொண்டு வாழ்ந்து காட்டுவோம்.

"வாழ்க தமிழர்கள் வையகம் வாழ்ந்திட
வாழ்க தமிழ் மொழி இனிமை பொங்கிட
வாழ்க வாழ்க வாழ்கவே"

தமிழில் பேசுவோம், தமிழராய் வாழ்வோம்.

நன்றி, வணக்கம்.